**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 188/2018**

2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 07–ஆம் நாள் வெள்ளிக்கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயபாலன் | சமயம் | : |
| த/பெ | : கலியன் (எ) கலியபெருமாள் | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

<u>வா.சா.1–ன் முதல் விசாரணை</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 12.04.1986–தேதியில் என் தந்தை பெயரில் ஏற்பட்ட பட்டா பாஸ் புத்தகம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 09.02.2016–தேதியில் இறந்த என் தந்தையின் இறப்பு சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 13.06.2018–தேதியில் என் மூத்த சகோதரர் மருதமுத்து பெயரில் ஏற்பட்ட கணினி பட்டா (பட்டா எண்.1578) கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 18.06.2018–தேதியில் என் மூத்த சகோதரர் மருதமுத்து தாவா சொத்து பொறுத்து எனக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், தாவா சொத்து பொறுத்து என் பெயரில் ஏற்பட்ட கணினி பட்டா நகல் (பட்டா எண்.1591) **வா.சா.ஆ.5** ஆகவும், என் தந்தையார் தாவா சொத்துக்கு செலுத்திய கிஸ்து ரசீது (கோர்வை–2) **வா.சா.ஆ.6** ஆகவும், என் தந்தையார் தாவா

சொத்துக்கு செலுத்திய கிஸ்து ரசீது (கோர்வை–4) **வா.சா.ஆ.7** ஆகவும், தாவா சொத்து பொறுத்து என் தந்தை செலுத்தி குடிநீர் ரசீது **வா.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாகவும் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிரிடை பாத்தியம் தள்ளுபடி செய்ய வேண்டியும் பிரார்த்திக்கின்றேன்.

(ஒப்பம்)திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.